உ

கணபதிதுணை

# விஶ்வபிரமபுராணம்

## பூர்வகாண்டம்

திருவையாறு

**அ. முத்துச்சாமி பாரதியாரவர்கள்**

இயற்றிய மூலமும்

மயிலாடுபுரம்

**வித்வான், கிருஷ்ணையரவர்களாற் செய்யப்பட்ட**

பொழிப்புரையும்

இவை

கும்பகோணம்

விஸ்வபிரமகுல வைதிகாசாரியராகிய

**இராமலிங்க உபாத்தியாயரவர்கள்**

குமாரர்கள்

சதாசிவ உபாத்தியாயரவர்களாலும்

மார்க்கசகாய உபாத்தியாயரவர்களாலும்

சென்னை

எழுமூர் 1, ரிதர்டன் ரோட்டிலிருக்கும்

**காஸ்மாபொலிட் அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டன.

விஜய ௵ தை ௴

[*All rights reserved.*]

1894.

## விஸ்வப்பிர்ம புராணத்தின்


| எண் | விஷய சூசிகை. | பக்கம். | பாடற்றொகை. |
|---|---|---|---|
| | காப்பு ... ... ... ... ... | ௧ | ௧ |
| | பாயிரம் ... ... ... ... ... | ௨ | ௩௨ |
| 1 | புராணவரலாற்றத்தியாயம் ... ... ... | ௧௫ | ௭௯ |
| 2 | உலகிற்கு முதல்வனையுரைத்த வத்தியாயம் ... ... | ௩௧ | ௨௭ |
| 3 | மகதாதிசிருஷ்டியுரைத்த வத்தியாயம் ... ... | ௪௯ | ௨0 |
| 4 | தேவநராதிசிருட்டியுரைத்த வத்தியாயம் ... ... | ௫௪ | ௩0 |
| 5 | பிரபஞ்சசிருஷ்டியுரைத்த வத்தியாயம் ... ... | ௬௩ | ௩௯ |
| 6 | அதிகார முறைமையுரைத்த வத்தியாயம் ... ... | ௭௪ | ௧௯ |
| 7 | காலப்பிரமாணமுரைத்த வத்தியாயம் ... ... | ௮0 | ௯ |
| 8 | ஆயுர் நிர்ணயமுரைத்த வத்தியாயம் ... ... | ௮௪ | ௨௮ |
| 9 | பிராமணாதிவருணதருமமுரைத்த வத்தியாயம் ... | ௯௧ | ௫0 |
| 10 | பிரமவமிசமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௬ | ௬0 |
| 11 | கோத்திராதிகளுரைத்த வத்தியாயம் ... ... | ௱௨௨ | ௩௫ |
| 12 | பஞ்சகிர்த்தியமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௪௧ | ௨௨ |
| 13 | நித்தியகருமமுரைத்த வத்தியாயம் ... ... | ௱௪௮ | ௩௫ |
| 14 | கர்ப்பாதானமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௬௪ | ௧௭ |
| 15 | புஞ்சுவனமுரைத்த வத்தியாயம் ... ... | ௱௬௯ | ௭ |
| 16 | சீமந்தமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௭௨ | ௮ |
| 17 | சாதகன்மமுரைத்த வத்தியாயம்... ... ... | ௱௭௫ | ௩௯ |
| 18 | நாமகரணமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௮௬ | ௧௩ |
| 19 | உபநிஷ்கிரமணமுரைத்த வத்தியாயம் ... ... | ௱௯0 | ௧௧ |
| 20 | அன்னப்பிராசன முரைத்த வத்தியாயம் ... ... | ௱௯௪ | ௭ |
| 21 | சவுளமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௱௯௭ ... | ௧௧ |
| 22 | உபநயனமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௨0௧ | ௨? |
| 23 | உபாகருமமுரைத்த வத்தியாயம்... ... ... | ௨0௮ | ௭ |
| 24 | வேதாரம்பமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௨௧0 | ௧௩ |
| 25 | பிரமசரியமுரைத்த வத்தியாயம்... ... ... | ௨௧௫ | ௧௫ |
| 26 | விரதசமாவர்த்தனமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௨0 | ௬ |
| 27 | விவாகபேதமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௨௩ | ௧௫ |
| 28 | விவாகப்பொருத்தமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௨௯ | ௩௧ |
| 29 | விவாகமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௨௪௧ | ௧௬ |
| 30 | மாதரொழுக்கமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௨௪௮ | ௩௫ |
| 31 | கிரகாச்சிரமமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௫௮ | ௧௫ |
| 32 | நல்லொழுக்கமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௨௬௩ | ௨௭ |

| எண் | விஸ்வப்பிர்ம புராணத்தின் விஷய சூசிகை. | பக்கம். | பாடற்றொகை. |
|---|---|---|---|
| 33 | பஞ்சமாவெச்சமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௭௧ | ௮ |
| 34 | அமாவாதி சிரார்த்தமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௭௪ | ௧௦ |
| 35 | சிரார்த்தபேதமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௭௮ | ௨௧ |
| 36 | சிரார்த்ததிரவியமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௮௪ | ௭ |
| 37 | சிரார்த்தத்தில் வரிக்கத்தக்கவரையுரைத்த வத்தியாயம்... | ௨௮௭ | ௧௪ |
| 38 | பார்வணசிரார்த்தமுரைத்த வத்தியாயம் ... ... | ௨௯௧ | ௩௨ |
| 39 | மகாளயவிதியுரைத்த வத்தியாயம் ... ... | ௩௦௧ | ௧௬ |
| 40 | உண்ணத்தகாதவையுரைத்த வத்தியாயம் ... ... | ௩௦௬ | ௧௭ |
| 41 | திரவியசுத்தியுரைத்த வத்தியாயம் ... ... | ௩௨௧ | ௨௪ |
| 42 | சூதகாசூசமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௩௨௮ | ௬௦ |
| 43 | வானப்பிரஸ்தவிதியுரைத்த வத்தியாயம் ... ... | ௩௩௫ | ௩௦ |
| 44 | சந்நியாசமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௩௪௪ | ௪௦ |
| 45 | கருமபலமுரைத்த வத்தியாயம் ... ... ... | ௩௫௬ | ௪௧ |


காப்பு பாயிரமுள்பட அத்தியாயம் ௪௫ க்கு
திருவிருத்தம் ௲௨௧.

---

## விளம்பரம்.

---


இப்புத்தகம் கும்பகோணம் நாகேஸ்வரஸ்வாமி கோவில் தெற்கு வீதியிலிருக்கும் சதாசிவ உபாத்தியாயரவர்களிடத்திலும்

மேற்படியூர் கடலங்குடித் தெருவிலிருக்கும் குருஸ்வாமிப் பத்தரவர்களிடத்திலும்

சென்னை, புரசைப்பாக்கம் மூக்காத்தாள் வீதியிலிருக்கும் எதுமலை தக்ஷிணாமூர்த்தி ஆசாரியாரவர்கள் குமாரர் பாலசுப்பிரமணிய ஆசாரியாரவர்களிடத்திலும்

தஞ்சாவூர் ஜில்லா திருவையாறு வடக்கு வீதியிலிருக்கும் முத்துச்சாமி பாரதியாரவர்களிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்துப் புத்தகம் ஒரே தடவையில் வாங்குவோருக்கு ஒரு புத்தகம் விலையின்றிக் கொடுக்கப்படும்.

சாதா பைண்ட் செய்த புத்தகம் 1க்கு விலை ரூ 2 அணா 8

காலிக்கோ பைண்ட் செய்த புத்தகம் 1க்கு விலை ரூ 2 அணா 12.



☞ இப்புத்தகம் சென்னை ஆங்கிலேய இராஜாங்கத்திலும், புதுவை, காரைக்கால் பிரான்சு இராஜாங்கத்திலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.


---

# சிறப்புப்பாயிரங்கள்.

———(∵)———

இஃது
சென்னை கவர்ன்மென்ட் ப்ரஸிடென்ஸீ காலேஜ் ப்ரோவெஸ்ஸரும்
கவர்ன்மென்ட் தமிழ் ட்ரான்ஸ்லேட்டருமாகிய
ராய்பஹதூர் பூண்டி அரங்கநாத முதலியார், எம். ஏ., எப். எம். யூ.
அவர்கள் எழுதியது.

The Visvabhrama Puranam by A. Muthuswami Bharatyar is in my opinion a work of considerable merit. The style is throughout characterized by purity and simplicity. The topics with which it deals are such as will find favour with the orthodox section of the community.

3rd December 1893.

P. RUNGANADAN, M. A.,

## தமிழ் மொழிபெயர்ப்பு.

அ. முத்துச்சாமி பாரதியாரியற்றிய விஸ்வப்பிர்ம புராணம் எண்ணிறந்த சிறப்பினையுடையதென்பது எனது அபிப்பிராயம். இது முழுவதும் சுத்தமுந் தெளிவுமுள்ள செம்பாகமான நடையாலமைந்திருக்கின்றது. இதிற் கூறிய விஷயங்கள் வைதிக வகுப்பினராகிய கூட்டத்தார்களால் மிகவியந்து அன்புபாராட்டற்குரியன.

3உ டிசம்பர்மீ 1893.

பூ. அரங்கநாதன், எம். ஏ.,

---

சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்ப் பண்டிதர்
ம-௱-௱-ஸ்ரீ பு. மா. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களியற்றியது.

விஶ்வப்ரஹ்ம புராணாக்யம் ஸர்வதர்மவிவேகதம் ।
த்ராவிட்யா பாஷயா முத்துஸ்வாமி பாரதி நாதநோத் ॥

இதன் கருத்து.—முத்துஸ்வாமி பாரதி யென்னும் தமிழ்ப் புலவர் சமஸ்த தர்மத்தையும் விளக்கும்படியான விஸ்வப்பிர்ஹம புராணத்தைத் தமிழ்ப் பாடல்களாகச் செய்தனர்.

சென்னை ச்சர்ச் ஆவ் ஸ்காட்லண்ட் மிஷியன் காலேஜ்
தமிழ்ப் பண்டிதர் திருவல்லிக்கேணி
ம-ா-ா-ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்களியற்றியது.

पञ्चनदक्षेत्रीयो मुत्तुस्वामीति विश्रुतस्साक्ष्यः ।
विश्वब्रह्मपुराणं द्राविडवाण्या जगद्धितं चक्रे ॥

இதன் கருத்து.—பஞ்சநதக்ஷேத்திரத்தில் ஜனித்து முத்துஸாமி யெனப்பேர் பெற்ற தமிழ்ப் புலவர், விஸ்வப்பிர்ஹ்ம புரரணத்தை லோகோபகாரமாகத் தமிழில் பாடல்களாகச் செய்தனர்.

---

சென்னை எஸ். பி. வி. கே. பிரஸ் எக்ஸாமினர்
ம-ா-ா-ஸ்ரீ கந்தாடை வரதாசாரியாரவர்களியற்றியது.

विश्वब्रह्मप्रवरपुराणं जनहृदानन्दककोमलपद्यैः ।
मुत्तुस्वामी कविकुलतिलकः कलशजकृतया कलया प्रीतः ॥

இதன் கருத்து.—கவிக்கூட்டங்களுக்கு நாயகமணிபோல் விளங்குகின்ற முத்துஸ்வாமி யென்கிற கவிசிரோமணியானவர், ஜனங்களினது மனதுக்கு ஆனந்தத்தை த்தராநின்ற மிகுந்த அழகுள்ள பத்திய ரூபமான சிரேஷ்டமாகிய விஸ்வப்பிர்ஹ்ம புராணத்தை, கும்பத்திலுற்பவித்த அகஸ்தியராலருளிச் செய்யப்பட்ட தமிழ்ப் பாஷையினால் மிகவும் சந்தோஷத்துடன் செய்தனர்.

---

சிந்தாத்திரிப்பேட்டை
ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீமத் பாரத்வாஜ இராமாநுஜாசாரியாரவர்களியற்றியது.

विश्वब्रह्मकुलोद्भवेन कविना मुत्तुस्वामिनाम्ना कृ-
तं विख्यातं निगमागमोक्तविषयं षण्णां मतानां
मतम् । वर्णानां चतुर्णां प्रभावसहितं स्वा-
चारैश्च धर्मैर्युतं प्राज्ञैर्नन्दितं विश्वब्रह्मा-
ह्वयं जीयात्पुराणं चिरम् ॥

இதன் கருத்து.—விஸ்வப்பிர்ஹ்ம குலத்தில் ஜனித்தவரும் முத்துஸாமியென்கிற நாமதேயத்தையுடையவருமாகிய பண்டிதரால் செய்யப்பட்ட*தாயும், பிரக்கியாதியுடையதாயும், வேதாகமங்களிற் சொல்லப்பட்ட மார்க்கத்தையுடையதாயும், சண்மதங்களுக்குஞ் சம்மதமாயும், பிராமணாதி நான்கு வருணங்களுடைய பிரபாவத்தோடும் ஆசாரதர்மங்களோடுங்கூடியதாயும், ஞானவான்களால் சந்தோஷிக்கத்தக்கதாயுமிருக்கிற விஸ்வப்பிர்ஹ்ம புராணமானது, அனேக காலம் அழியாதிருக்கக்கடவது.

* சுலோகத்தில் முத்ஸாமியென்கிற பதத்துக்கு சந்தோஷகரரென்றும் ஒரு அர்த்தந் தொனிக்கிறது.

கும்பகோணம்

## ம-া-ா-ஸ்ரீ முத்துஸ்வாமி சாஸ்திரியாரவர்களியற்றியது.

ப்ரக்²யாதம் புராணம் யத்³பா⁴ஷயா விஶ்வகர்மாபி⁴-
தா⁴நம் வ்ருத்தம் லோகே கவேஸ்தத்³க³தஸுஜநயா விஶ்வ-
கர்மைவஸாக்ஷாத்। முத்துஸ்வாமீதி நாம்நா கவிஹ்ருத³யஸ-
ரோஜவ்ராதா³மோத³ப்ரதா³யீ ப்ராது³ர்பூ⁴த ஸுஸம்ஜ்ஞோ
விபு⁴ரயமிஹ தம் பா⁴ஷயாபரேஷ்வாயே ॥

இதன் கருத்து.—யாதொரு விஸ்வகர்ம புராணமானது, சமஸ்கிருத பாஷையினாலே பிரசித்தமோ, அந்தப் புராணத்தைக் கவிகளுடைய இருதய தாமரஸ புஷ்பங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறவராயும், நல்ல பிரக்ஞையுடையவராயும், இருக்கிற சாக்ஷாத் விஸ்வகர்மாதானே, தேவதைகளாலே பூஜிக்கப்பட்டிருக்கிற பஞ்சநதக்ஷேத்திரத்தில்,முத்துஸ்வாமியென்கிற நாமதேயத்தோடு உண்டானவராயிருந்துகொண்டு, அகஸ்திய பர்ஷையினுலே லோகத்தில் வெளிப்படுத்தினுரென் றெண்ணுகிறேன்.

இதில் விஸ்வகர்ம என்கிற பதத்துக்கு சூரியனென்றும் ஒரு அர்த்தமிருக்கிறபடியினலே, தாமரசபுஷ்பங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறவராயும், சமிக்ஞாதேவியோடு கூடினவராயுமிருக்கிற சாக்ஷாத் சூரியனே உண்டாகி யிந்த கிரந்தத்தை வெளிப்படுத்தினுரென்று ஒரு அர்த்தம் த்வனிக்கிறது.

---

கும்பகோணம்

## ம-া-ா-ஸ்ரீ சுந்தரசாஸ்திரியாரவர்களியற்றியது.

ஶிஷ்யஸம்ப³ந்தி⁴பா⁴ஷா கத²நரதி⁴யா ஸ்வீயநாமைவ மு-
க்தாஸ்வா ப்ராப்தேந ஸ்வர்ணவம்ஶஜநிநா விஶ்வக-
ர்மாந்வயே । ஸுப்³ரஹ்மண்யேந ப்ரகடிதமமல ப்ரீதி
ஹேதோர்ஹேரம்ப³வர்ணாத் ஶ்ருதமிஹ த்³ரவி-
ஷ்டம் விஶ்வஸம்ஜ்ஞம் புராணம் ॥

இதன் கருத்து.—சிஷ்யசம்பந்தினியான பாஷையைச்சொல்லுகிறதில், ஆசையோடுகூடின புத்தியினலே, முத்துஸ்வாமியென்கிற தன்னுடைய பெயரைத்தானே அடைந்து,விஸ்வகர்மாவினுடைய வமிசத்தில்உண்டாயிருக்கிற சுப்பிரமணியராலே, பரமசிவனிடத்தினின்றும் சமஸ்கிருத பாஷையினுலே கேட்கப்பட்டதாயும், சிரேஷ்டமாயுமிருக்கிற விஸ்வகர்ம புராணமானது, இந்த வுலகத்தில் வித்வான்களுடைய பிரீதியினிமித்தம், அந்தத் தமிழ்ப்பாஷையினுலேயே, நன்றாகப் பிரசித்தம் பண்ணப்பட்டது நிச்சயம்.

ம-ா-ா-ஸ்ரீ லட்சுமண சாஸ்திரியாரவர்களியற்றியது.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌮𑍁𑌤𑍍𑌤𑍁𑌸𑍍𑌵𑌾𑌮𑍀𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 𑌕𑌵𑌿𑌰𑌾𑌟𑍍 ।
𑌵𑌿𑌦𑌧𑍇 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌵𑌾𑌣𑍍𑌯𑌾 𑌸𑍁𑌕𑍃𑌤𑌵𑌶𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

இதன் கருத்து.—சகல ஜனங்களும் செய்த சுகிர்த விசேஷத்தாலே, முத்துஸ்வாமி யெனப்பெயர்பெற்ற கவிசிரோமணி, விஸ்வப்பிர்ஹம புராணத்தைத், தமிழ்ப் பாவினுல் பாடினர்.

---

யாழ்ப்பாணம், நல்லூர்

வித்வான் ச. பொன்னம்பலப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவு நதிவளமுங் குடிவளமு நிலவளமும் பொலிவுற் றேங்கி
பாமேவு நாமகளும் பூமகளு நண்பினமர் பண்பு பெற்று
காமேவு விண்ணுலகு மண்ணுலகு நண்ணியுளங் கசிந்து போற்றத்
தேமேவு மருள்சுரக்குஞ் சிவதலங்கள் பலதுலங்குஞ் சென்னி நாட்டில் (க)

தேங்காத வருட்செல்வ ரோடுபொருட் செல்வர்நிறை திருவை யாற்றில்
பாங்காருந் தமிழ்ப்புலவ னெக்கவியும் விரைவாகப் பாடுஞ் சீர்த்தி
நீங்காத வெழின்முத்துச் சாமிபா ரதியிந்த நிலத்தின் மீது
யாங்காணும் பிரபஞ்சத் தோற்றமுறை கிரியைமுறை யாருந் தேற (உ)

ஆரியத்தி னருள்விசுவப் பிரமபுரா ணத்தினிய லாய்ந்து தேறிப்
பாரியலுந் தமிழின்மொழி பெயர்த்தறிஞ ராவல்கொளப் பாட லாக்கி
சீரியநற் கிரமநெறி நனிதுலங்கப் பிரகடனஞ் செய்தா னென்ப
கூரியநன் மதியாளர் யாவர்களும் பாராட்டிக் கொள்ப வன்றே. (௩)

---

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விசுவமர பினர்க்குலகில் விதித்தநிய மாதியெலாம் விரித்துக் கூறும்
வசையில்விசு வப்பிரம புராணவட மொழிதமிழில் வகுத்தான் மன்னோ
குசைநுனியிற் கூர்மதியோன் மன்றினடம் புரியிறைகோ கனகத் தாள்வேய்
திசைபெறுமை யாற்றுமுத்துச் சாமிபா ரதிபுலவ ரேந்தன் மாறோ.

# சென்னை வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

அஷ்டாவதானம் புரசை, ம-ா-ா-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கரும்,
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பிரதம பண்டிதருமாகிய
திரு. சின்னசாமிப் பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குன்றுதோ ருடல்புரி குமரவேள் குரைகடலி னடுவட் டோன்றும்
என்றுநே ரெனமயின்மீ தெழுந்தருளி யுலகைவலம் வந்த வெம்மான்
துன்றுவார் சழலிணைக்கே கனிந்துருகு துகளிலன்பர்க் கருளுந் தூயோன்
மன்றுளா னந்தநடம் புரியிறைவன் மலர்க்கழல்க ளிறைஞ்சி யேத்தி (௧)

எந்தையே யிரும்புவியி லுதித்தபல பலவுயிர்க ளெவைக்கு மேலாம்
புந்தியா லுயர்சருமா னிடர்தமக்குப் புகலுமிக பரபோ கங்கள்
உந்துசீர் தருநூலொன் றுரைத்தருள வேண்டுமென வுளமி ரங்கி
யிந்துவார் சடையணிந்த விறைவனிள முறுவல்பூத் தியம்ப லுற்றான் (௨)

அம்புவியின் வாழ்மாந்தர்க் கியாம்வகுத்த வாழ்நாளு ளடைதற் பால
வின்பமுறற் குறுகருவி மேலடையு மின்பினுக்கா ரால யங்கள்
மன்பெறுமவ் வாலயங்கட் குரியவுப கரணமெலா மமைக்கு மாண்புங்
கொன்பெறவே விளக்கும்விசு வப்பிரம புராணமெனக் கூறு மோர்நூல் (௩)

அன்னதொரு நூற்பொருளை யாம்விளக்கிக் கூறவக மகிழ்ந்து கேட்டி
யென்னவிளம் பிறைமுடித்தோ னிசைத்தருளக் காதலவேற் குகனு மெந்தை
மன்னுதிருச் செவியேற்றுக் களிதுளங்கி மாதவத்தோர்க் கிறைவ னென்னுப்
பன்னுபுகழ்க் காசிபமா முனிதனக்குப் பரிவுடனே பகர்ந்தான் மன்னோ. (௪)

அந்தமறை முனிமெய்யன் பொடுகேட்டுப் பத்திதழைத் தவச மேற்கொண்
டெந்தைபிரா னருளியவா றேயிருங்கா ளத்திமுனிக் கியம்ப வன்னோன்
வந்தனையோ டுடல்புளக மெழக்கண்ணீர் வாரவிரு செவியேற் றோங்கு
தந்தமதக் களிறூருஞ் சுவிரதனுந் தராதிபற்குச் சாற்றி னானல் (௫)

எண்ணரிய புகழ்படைத்த வப்பெருநூல் வடமொழியி லிருத்த லாலிம்
மண்ணுலகின் வடமொழிநூற் பயின்றோரே யன்றிமற்றோ ருணரா ரென்றே
யெண்ணியிருந் தமிழின்மொழி பெயர்த்துவிருத் தப்பாவி னிசைத்தா னந்த
வண்ணவிருத் தப்பாவி னுயர்கம்பன் மாக்கம்ப னுகு மாறே (௬)

சொற்றவுயர் நாற்கவிகட் கினியவுரை தொழுகுலஞ்செய் தவத்திற் றோன்ற
லுற்றகிருஷ் ணையமா லுயர்புலவ னமைத்துதவ வச்ச மைத்தான்
தெற்றெனவா கீசருக்குக் கயிலைவளந் தெரித்ததிரு வையா றென்னும்
பெற்றிமைசேர் தலத்துவிசு வப்பிரம குலஞ்செய்தவப் பேறாய் வந்தோன் (௭)

சுத்தவுள மாழ்ந்தகலைத் தெளிவொழுக்கஞ் சுருதிநிகர் வாய்மை யாதி
யுத்தமவொண் குணநிதியைந் தடக்கியா ரொடுக்கியென்று முலவா வின்ப
வத்துநிலை யுணர்ந்தடுத்த மாணவரு மாண்புறச்செய் வண்மை வாய்ந்த
தத்துவன்முத் துச்சாமி பாரதியென் றெத்தவரும் புகழ்மே லோனே. (௮)

திரிசிரபுரம், மஹாவித்வான்
ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணாக்கரும்,
சென்னைக் கவர்ன்மெண்டு நார்மல் பாடசாலைத் தமிழ்ப்புலவருமாயிருந்த
திரிசிரபுரம் சோடசாவதானம்

## சுப்பராயசெட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொலம்பூத்த விதழிமதி நதிபொதிசெஞ் சடைமவுலிப் புனித வள்ளல்
நலம்பூத்த மறைமொழியி னுணர்த்தியநாற் பயனனைத்து நரலை சூழும்
நிலம்பூத்த மாக்களினி தெளிதெய்த வறங்களெலா நெறியி னோங்க
வலம்பூத்த சுவைபலவு முட்பொதிந்து சிறப்புறப்பா வலர்கொண் டாட (க)

மாமேவு சீர்விசுவப் பிரமபுரா ணந்தமிழால் வனைதல் செய்தான்
பாமேவு புகழ்விசுவ குலதிலகன் பலகலையும் பண்பி னோர்ந்து
தேமேவு மையாற்றின் மகிழ்பலநற் குணத்தாலுஞ் சிறந்து வாழ்வோன்
பூமேவு மெழின்முத்துச் சாமிபா ரதியென்னும் புலமை யோனே. (உ)

---

சென்னை பச்சையப்ப முதலியார் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ பூ. கிருஷ்ணசாமி முதலியாரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

நிலவு பொழிதரு குலவிய மதியணி, யத்தன தருளி னறுமுகச் செவ்வே
ளித்தரை தன்னி லிருந்தவர் முன்னாங், காசிப முனிவரற் காசற வருளா
வன்னா னுவகை மன்னா வுரைப்ப, முக்கட் பகவனை யெக்களித் துளநிறீஇ
யென்னரு மியற்றரு மன்னிய தவம்புரி, சீர்கா ளத்தியென் றோர்நாமம் புனை
யந்த மணவினோன் புந்தியி னுணர்ந்தே, வீங்குநீர் பழனத் தோங்கிய பைங்கூழ்
திகடரு வளம்பொலி மகதநன் னாடன், வான்றொடு குடுமி யான்றநிலை மாட
மிலங்கு நாகர மெழின்மிகு நகரந், துலங்க முழுதூஉந் தொன்முறை வழாஅது
முரசறைந் தெங்கு மரசிய னடாத்துந், தூய்மை மிகுந்த வாய்மை யுடையான் [யா
மண்ணண்ம முழவின் பண்ணமை தோளான், மழைசுரந் தன்ன விழைதருங் கொடை
னவிரித ழலங்கலான் சுவிரத கோமான், அருள்புரி கென்னா தெருளுறத் தெரித்த
வின்ன தன்மைய தென்றெடுத் தெவரும், பன்னுத லொண்ணாப் பரம்பொரு ளாய
முச்சக மேத்தும் விச்சுவ பிர்ம்ம, மாந்தகு புராணம் போந்த தின்னணஞ்
சீரிய தேவ வாரிய மொழியான், சமைந்த பான்மையி னமைந்த பல்லவர்க்
கறிவரி தாயதை யறிவி னோர்ந்தே, செந்தமிழ் மொழியாற் றந்தளிக் கென்னா
பெரியா ரருளிற் பரிவிற் பணிப்ப, அம்மொழி தடாது செம்மொழி யானே
யறமுத னான்கு மாச்சிரம நான்கும், பெறவருங் கதியும் பிரபஞ்ச தோற்றமும்
பதியிலக் கணமும் பரம்பரை வழாஅ, விதிவிலக் காதி விளக்குற வேண்டி
யின்னய மொழிகளு நன்னயத் தொடர்களும், யாப்பி னமைத்துக் கோப்புடைத் தாகத்
தமிழ்மண மணக்குந் தாத்திரி யதனி, லமிழ்தினு மினிதா வளித்தன னம்மா
மும்மையும் பசுக்களின் மும்மல மொழித்துச், செம்மை செய்தொளிர் செய்யுந் தகை
காசினி யதனிற் காசியென் றோதுந், தேசுறு புரங்கள் மாசிலாத் திருவெண் [மையான்

காசிமுன் ஞன நாடரு பதியினுள், புயல்வளம் வறப்பினு முயல்வணம் பாய்புன்
லெஞ்சுத லில்லா விஞ்சுபுகழ் வாய்ந்த, பஞ்சநதி மருஉம் பான்மை யானே
பஞ்ச நதமெனும் பதிவள ரண்ண, லிப்பூ தலமெலா மப்பா வென்றே
நயக்கும் பெயரிய வியக்கு மன்பினன், செய்தவப் பயனெலாந் திரண்டொரு படிவ
வெய்தவ தரித்த விலங்கு பெற்றியான், விச்சுவ பிர்ம்ம வியன்மர பதனி [மா
லுச்சம் பெற்றுய ருலவாச் செம்மல், தங்குல நலமெலாந் தயங்கொளி செய்தரு
திங்கள் போலத் திகழ்வுறச் செய்தோன், சிவனடி யவரைச் சிவமெனக் கொளீஇப்
பவம தொரீஇய தவமது மேயோன், மதுவழிந் தொழுகும் புதுமலர்த் தண்பூந்
தா ரணி முத்துச் சாமி, பாரதி யென்னும் பாவலன் றானே.

---

அஷ்டாவதானம், ம-ள-ள-ஸ்ரீ வீராசாமி செட்டியார் மருகரும், மாணாக்கருமாகிய
கு. அப்பன் செட்டியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செய்யாற்றைந் தானபிதா னப்பதியன் விஸ்வகுலச் சீமா னென்றும்
மெய்யாற்று முத்துச்சா மிப்பார திப்பெயரோன் மிருதி யாதி
வையாற்றுப் பொருடிரட்டி யுயர்விஸ்வ குலப்பிரம மாபு ராணம்
பையாற்று வானுமுடி துளக்கமிகப் பரிவாகப் பகர்ந்திட் டானே.

---

திருமயிலை வித்வான்
ம-ள-ள-ஸ்ரீ சண்முகம் பிள்ளை யவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்த பூங்கமலப் பொகுட்டுறைவோன் புரிதருபல் புவனம் யாவும்
கொன்பூத்த துயரெனைத்து மிரிந்தோடக் குடைந்தாடுங் குளிர்நீர்க் கங்கைத்
தென்பூத்த நதிமுதல தங்கொடும்பா வந்தணப்பச் செறியு நீர்த்தாம்
மன்பூத்த வளங்கனியும் பொன்னியிரு மருங்குடைய வளவர் நாட்டில் (௧)

அறம்வளர்த்த நாயகியோ டமர்ந்துயிர்கட் கிரும்போக மளிக்க நாளும்
நறுங்கடுக்கை முடிக்கணிந்த பரம்பரன்றன் குமரனொடு நலக்க மேவும்
கறங்குபுன லையாற்றில் விசுவகுலஞ் செய்தவமே கவின்று லன்ன
திறங்குலவு மப்பாவா சாரிபுரி புண்ணியமே திரண்டாற் போல்வான் (௨)

நல்லொருக்க நிரம்பியோன் பல்கலைதே ரறிஞர்பிரா னலஞ்சான் மெய்மைக்
கல்விகேசு வியிற்சிறந்தோன் விராட்புருடன் றனதிதய கமல மென்னும்
தில்லைநடம் புரிதருகுஞ் சிதபாத மல்லதொன் றுஞ் சிந்தை தன்னிற்
புல்லகிலா வன்புறுமுத் துச்சாமி பாரதியாம் புலவ னம்மா (௩)

வடமொழியிற் கூறியாங் கறமுதனாற் பயன்மலிய வயங்கு முந்நீர்க்
கடனிலத்தின் னிலைமுன்னா யோர்வீடு பேறென்றுங் க்ருதி யெய்த
அடைவினொடு விருத்தயாப் பினிற்பலநன் னயம்பொலிய வறிஞர் நாட்ப்
படியில்விசு வப்பிரம புராணநூல் புகன்றளித்தான் பரிவான் மன்றோ. (௪)

### தத்துவவிவேசினி பத்திராதிபர்
### புதுவை, ம-ா-ா-ஸ்ரீ முனிசாமி நாயகாவர்களியற்றிய
### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விச்சுவப் பிரம குலத்துறு விசேடம் விளக்குவான் வியனுல கதனின்
மெச்சுறு தமிழான் மொழிந்தனன் மேலோர் விரும்புமாரிய மொழிப் படியே
விச்சுவப் பிரம புராணமா மிதனை மேதினி யோர்நனி வியக்க
உச்சி தத்திரு வையாற் றுறைமுத்துச் சாமிபா ரதியெனு முரியோன்.

---

### அஷ்டாவதானம்
### ம-ா-ா-ஸ்ரீ பூவை. கலியாணசுந்தா முதலியாரவர்களியற்றிய
### நிலைமண்டிலவாசிரியப்பா.

பெருமையுடைத்தேபெருமையுடைத்தே,பெருமைபெந்நூலினும்பெரிதுமுடைத்தே
யொருமையோ டளாவு முண்மைப் புலவ, ரருமை யருமையென் றறைப வுரித்தே
நித்திய முதல்வ னிமலை முன்னுச், சத்தியோ சாதத் தனிமுகங் கொடுஉப்
பாகம துறவே பசுக்க டமக்கா, வாகம நாலே ழளிக்க வவற்றுள்
பன்றலை கிடந்த பயன்படு விதிக ளெஃதெஃ திம்மைக் கின்றி யமையா
திருக்கி னம்மைக் கேதெனத் தூக்கிச் சுருக்கமும் விரிவுந் தோன்றிடச் செய்யா
தரிய கிரியைக ளனைத்தையுந் தொகுத்து, வரிசையிற் சிருட்டி வகையும் வகுத்து
விதிவிலக் காதிய மெய்ம்மை யேவல்கள், சதிர்பெற வியற்றுந் தன்மையும் விளக்கித்
தொடைபொருட் சொல்லாற் றேன்று நயமெலா, மடைவாய்ச் சிவணு மழகு நிறீஇ
யிச்சக மானவர்க் கிருகண் மான, விச்சுவ பிரம புராணம் விளக்கினன்
மருமலர்ப் பொய்கை மரூஉ மன்ன, மருகுறுந் தன்னு ணடையுண் மறைசலு
மலமந் தலற வக்குள நீரில், நிலவி னிழலுற நெருங்கி யதுவென [ணமோ
வணையத் துண்ணென வவணெதிர் வரூஉந், துணையைக் காண்டலுந் தோன்றிய நா
டடரலர்த் தொகையா மவற்றுட் புகூஉந், தடமார் பழனஞ் சாரும் பதியா
மெய்யார் மோக்க வீட்டை வழங்கு, மைய்யா றதனி லார்பவன் சொற்றெறுஞ்
சொற்றெறுஞ் சுவைக ளிர்ப்ப நன்கு, கற்றவர் வியக்கக் கவிக ளனேக
மடமட வெனவே வகைவகை யாகத் திடமுடன் பாடுந் தீர ஞானேன்
தெய்வஞ் சிவமெனத் தேர்ந்து சமயச் சைவ நிறுத்துந் தலைமை யாளன்
பூதியே பொருளெனப் போற்று மடியார் பாதமே கதியெனப் பற்றுவன் பராஅ
யில்லை யிதற்கிணை யான தலமெனத், தில்லைப் பதியிற் றிருநடங் கொண்டான்
குஞ்சிதக் கழலைக் குகையகத் தடக்கிச், சஞ்சித மாதி தவிர்த்து ஞான
மார்ந்த வித்வ சிகாமணி யாகச், சார்ந்த முத்துச் சாமிபா ரதியே.

---

### உரையாசிரியர், காஞ்சீபுரம், வித்வான்
### ம-ா-ா-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் குமாரரும்
### சென்னைக் கல்வி மடத்தில் சிவபுராணப் பிரசங்கஞ் செய்பவருமாகிய
### பாலசுப்பிரமணிய முதலியாரவர்களியற்றிய
### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்னுசீர்த் தேவ பாடையில் விளங்கும் விச்சுவப் பிரமபு ராணம்
என்னரு மகிழ்வோ டறமுதற் பொருளை யெளிதினன் குணர்ந்தினி தடைவான்
பன்னயம் பொலியப் பைந்தமிழ் யாப்பாற் பாடினன் றிருவையாற் றினில்வாழ்
உன்னரும் விசுவ குலசிகா மணியா முயர்முத்துச் சாமிபா ரதியே.

புரசை, அஷ்டாவதானம் ம-ா-ா-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் மாணுக்கரும், கவர்ன்மெண்டு டிரான்ஸ்லேட்டர் முனிஷியுமாகிய
**தண்டலம், பாலசுந்தர முதலியாரவர்களியற்றிய**
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அங்கணன் கைம்முறி காட்டி யாண்டநம்பி யாரூரன் றம்பெருமா னருமைக் காட்சி
யிங்களவா வன்பானே காண வன்னேற் கியைந்தாறு வழிவிடுத்த வெழிலை யாற்றுந்
தங்கியநல் லறிவொழுக்க மேயமுத் துச்சாமிபா ரதிவிசுவப் பிரம மென்னுந்
துங்கபுரா ணந்தன்னை மொழி பெயர்த்துச் சொன்னயமுற் பொதுளநனி சொற்று
[னன்றே.

---

சிந்தாத்திரிப்பேட்டை
**வித்வான் ம-ா-ா-ஸ்ரீ தி. சிதம்பர முதலியாரவர்களியற்றிய**
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்னேங்கு மறிமானும் வரதமுட னபயமுறு மொய்த்தோ ணன்கும்
மின்னேங்கு விரிசடையி னதிமதியும் விடவரவும் விளங்குந் தேவைத்
தென்னேங்கு மடியவர்கட் கருள்வழங்குந் திரிபுரசுந் தரித்தாய் காணப்
பொன்னேங்கு மணிமன்ற நடித்தருளும் புண்ணியனைப் புந்தி வைத்தோன் (க)

திரசமய மிதுவென்னத் திருநீற்றி னெறிவிளங்கத் திகழ்பூ முல்லைப்
பிரசமயக் கருங்கூந்தற் பிடிநடைமீ னாட்சியுமை பேணு மீரந்
தரசமய மதுகொண்டு முன்றுங்காச் சிவிகைபெறு சதுரன் முன்னும்
பரசமய கோளரிநா தச்சாமி பதநிதமும் பரவு மேலோன் (உ)

வெங்கரா மதுவுண்ட மகவதனை யழைத்துதவும் விறலோன் கைலைக்
கங்கரா சலமீது செலவல்லோ னரும்பரவைக் கன்ப னீடு
சங்கரா சிகளீன்ற முத்தமலைத் தணைசார்த்தும் பொன்னி நீத்தம்
சங்கரா வழிவிடச்செய் யெனத்துதிக்கு மையாறே தலமாக் கொண்டோன் (ங)

அத்தகைய வளம்பதியி னறிவொழுக்க முதற்குணங்க ளமைந்து வாழ்வோன்
முத்தகைய தமிழ்ச்சங்க முதுநூலாய் விதரணன்மூ தறிவின் மிக்கோன்
எத்தகைய தேவர்களு மிறைஞ்சுசிவ பரஞ்சுடரை யேத்து மாண்பின்
சுத்தகையம் புடையன்முத்துச் சாமிபா ரதியெனும்பேர்த் தூய்மை மிக்கான் (ச)

தங்கருள்சேர் புலமைபெறு கம்பரோ தகுமொட்டக் கூத்தர் தானோ
பொங்கருமாக் கவிகாள மேகமோ விவரென்னப் புவியோர் போற்றத்
துங்கமிகு புகழ்விசுவப் பிரமகுலத் தொருமொழுக்கா ரியத்தி னுள்ள
தங்கமையத் தமிழ்க்கவிதை யனைவருமே யுணர்தரவிங் கறைந்திட் டானல் (ரு)

அன்னபுரா ணக்கவியு ளமைந்தநவ ரசமுதலா வமைதி யாவும்
கன்னபுரா விருத்தமதா யுணர்தரினல் லதுகருத்துக் காண லாகா
தென்னவுரை யியற்றுவித்தே யாவருங் கொண் டாடவெழு தாவெ ழுத்தின்
நன்னயமாப் பதித்துதவு நன்மையினுக் குறுகைம்மா றெவன்கொன் மாதோ. (சு)

ஆயுர்வேத பண்டிதர், பாண்டேச்சுரம், ம-௱-௱-ஸ்ரீ வேங்கடசாமி தேவரவர்கள்

குமாரர் கங்காதர தேவரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெத்துச்சா தநமுப்பு ஸஜாதிவிஜா திகப்பொருளை வெண்மை யாக்கி
லிவத்துச்சா தரூபமதா லோகங்க ளனைத்தையுஞ்செய் வாய்மை யேபோல்
நத்துச்சா தியரொழுக்கந் தூய்மையா சாரமிகு நலனுற் றோங்க
முத்துச்சா மிப்புலவன் விஸ்வபிர்ம புராணமதை மொழிந்தான் மன்னோ.

---

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

ம-௱-௱-ஸ்ரீ சூ. சுப்பராய நாயகரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தரைசெய்தவப் பயனாகச் சைவநெறித் தலைவரெனுந் தகைமை வாய்ந்தே
யுரைபெருக வருஞான சம்பந்த ரவதரித்த வொப்பி லூடும்
கரைபெருக வருகங்கை முதனதிகள் படிந்துபெருங் கவினுற் றோங்கும்
புரைதவிர்சீர்ப் பொன்னிவளந் தருநாடு மெனப்பொலியுஞ் சென்னி நாட்டில் (க)

நிலவணிசெஞ் சடைப்பெருமா னாரூரர்க் காப்பொன்னி நீத்தந் தன்னை
விலகவரு ளியவையாற் றுப்பதியின் விசுவகுலம் விளங்கக் கற்றோர்
திலகனென வருமுத்துச் சாமிபா ரதியென்னுந் திறல்கொள் மேலோன்
உலகினர்நல் லொழுக்கனைத்து மெளிதினுணர்ந் தனுசரிப்பா னுணர்த்த வேண்டி ()

ஓங்குவிசு வப்பிரம புராணமென வாரியத்தி னுளிர்நன் னூலைப்
பாங்குறுமப் பெயரானே மொழிபெயர்த்தின் னியற்றமிழாற் பாடித் தந்தான்
தீங்ககன்றிவ் வுலகுய்ய வைதிகச்செந் நெறிவிளக்குந் திண்மை யாளன்
வாங்குதிர்க் கடலுலகி னீடூழி புகழ்படைத்து வாழ்க மாதோ. (௩)

---

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

ஈக்காடு ம-௱-௱-ஸ்ரீ இரத்தினவேலு முதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளரு மணிமருமத் திருமாலுந் திசைமுகனுந் தேடிக் காணாப்
பரமனுறை திருக்கயிலை பணியிமிடை பண்ணவர்கு ழாங்க டம்மை
வரன்முறையிற் செலவிடுத்துச் சுரிகைவேத் திரங்கரத்து வயங்கத் தாங்கி
குருமணிவெண் ணிறம்வாய்ந்து சிவபெருமான் சாரூபங் கொண்ட நந்தி (க)

பன்னாட்டிற் புகழ்படைத்த செம்பியர்பூ பதிநாட்டுப் பஃறலத்துள்
முன்னாட்டத் தனதுதிரு வையாற்றின் முப்புரிநூற் சிலாதன் சேயாய்
எந்நாட்டி னவர்களும்வை திகசைவ நிலையுறீஇ யிணைத்தாள் போற்றிப்
பொன்னாட்டுப் பலபோகப் புணர்ப்படைய முதற்குருவாய்ப் போந்தா னன்றே (௨

அப்பதியில் விசுவகுலத் தருந்தவத்தா லவதரித்தே யன்னோன் போல
மைப்பொலியு மான்விழியார் மயலகத்து மன்பதைகள் மயங்கா வண்ணம்
செப்பியதொல் காப்பியங்க ளிலக்கணவைந் தியலுடனே சிவசொ ரூபம்
இப்புவியிற் பலர்க்கோதி யாசிரிய னெனுநாம மியைய வாழ்வோன் (௩)

சூலனருடெய் வங்கொள்கை மேன்மைமுத லொருபஃதாய்க் கூறு மாட்சி
நிலவியசூத் திரத்திற்கோ ரிலக்கியக்காட் டெனக்கடல்சூழ் நெடிய பாரில்
புலவர்மர பினுக்கேற்பத் தனையடைந்தோர் புலமையுறப் புரிவோ னென்னு
பலருரைமுத் துச்சாமி பாரதியா மபிதானப் பாவல் லோனே (௪)

உயர்விசுவப் பிரமபுரா ணந்தன்னை யாரியத்தி லுரைத்த வாறே
மயர்வின்றி மணவினைபுஞ் சுவனஞ்சீ மந்தமகிழ் சாத கன்மம்
செயுஞ்சவுசஞ் சவுளமுப நயனமுத லீமவிதி யீருச் செவ்வே
அயர்வெய்தா தெம்போல்வா ரெளிதுணரத் தமிழ்நடையா லறைந்தான் மன்னோ. ()

---

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பிரதம பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ திரு. சின்னசாமிப்பிள்ளையவர்கள் மாணாக்கரும், பெங்களூர் ராயபஹதூர்
ஆ. நாராயணசாமி முதலியார் ஐ இஸ்கூலிலும், சென்னை பச்சையப்ப
முதலியார் காலேஜ், கோவிந்த நாயகர் இஸ்கூலிலும் தமிழ்ப் பிரதம
பண்டிதருமாயிருந்த

ஆரணி, ஆ. கமலநாதமுதலியாரவர்களியற்றிய

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இருநிதி யுதவு மிகுதுயர் களையு மிகவிரு வினைகளைப் போக்கும்
வருபவ மொழிக்கு மழிவில்பே ரின்ப வாழ்வினை யெளிதினி லுதவும்
அருமைசேர் விசுவப் பிரம புராண மறைந்தனன் றிருவையாற் றிடைவாழ்
இரும்புகழ் முத்துச் சாமிபா ரதியா மிணையினாற் கவிப்புல வோனே (௧)

கன்னலின் சுவையோ சுவைமுதிர் பாகோ கருதிடு மினிய சர்க்கரையோ
உன்னுகற் கண்டோ பரவுகோற் றேனோ யுளமகிழ் வெய்துமுக் கனியோ
இன்னறு மமுதோ திருவையாற் றினில்வா ழியன்முத்துச் சாமிபா ரதிதான்
சொன்னசீர் விசுவப் பிரமபு ராணச் சொன்னயம் பொருணய மம்மா. (௨)

---

இயற்றமிழாசிரியராகிய திருத்தணிகை, ம-௱-௱-ஸ்ரீ சரவணப்பெருமாளையரவர்கள்
பௌத்திரரும், கந்தசாமி ஐயர் புத்திரருமாகிய

**தீ. தருசாமி ஐயரவர்களியற்றிய**

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓங்குதிரு வையாற்றுப் பதியு ளன்பி னுற்றிலகும் விஸ்வகுலத் துதித்துச் சீர்த்தி
தாங்குமப்பா வாசாரி தனயன் முத்துச் சாமிபா ரதிவடநூற் படியே மிக்க
பாங்குறுவிச் சுவப்பிரம புராணந்தன்னைப்பன்னுதமிழ்ப்பாவதனுற்புனைந்துரைத்தான்
வீங்குநெடுங் கடல்சுலவும் புவியு ளந்த வியன்மரபோர் புகழென்றும் விளங்க மாதோ

---

வித்வான், அரன்வாயல், ம-௱-௱-ஸ்ரீ வேங்கடசுப்புப் பிள்ளையவர்கள் சோதரர்

**அ. தங்கவேலுப் பிள்ளையவர்களியற்றிய**

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருவகலாப் பிரபஞ்சோற் பத்திமுதற் பற்பலசற் கரும நீதி
வருவகலா றடர்விசுவ பிரமபுரா ணந்தமிழால் வகைவிரித் தான்
பருவகலா மயிற்பரியோன் சூதமகா முனிவரன்னுர் பலர்வாழ்த் தோதச்
சருவகலாப் பிரசங்க பாரதியை யாற்றுமுத் துச்சாமி மாதோ.

---

அஷ்டாவதானம் ம-௱-௱-ஸ்ரீ பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள் மாணுக்கர்

**வல்லை. சண்முகசுந்தர முதலியாரவர்களியற்றிய**

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடலுலகில் வாழுமுயிர் யாவுமே தர்மார்த்த காம மோட்சந் தெரிந்தே
கதியடையு மாறுமுன் வடமொழியி னிலையுறுங் கனமான விசுவ பிரம
வடலுறு புராணமதை யெவர்களுங் கண்டறித லாகா தெனத் தெளிந்தே
யங்கமுயி ரேற்றிமறை வாசல்வழி கண்டுமண மலராகி யைத்தூ திடை
யடைவுபெற வைத்ததோ ரினியபைந் தமிழாத லாய்ந்துநவ ரச மொழுகவு
மாரியப் புலவர்கூட் டுணவாய்த்த காவியம தாகுமென் றேத்த வெவருந்
திடமான செம்பொனொளி வண்ணருறை பெற்றியுயர் திருவையா றதனினிடை
சித்தாந்த சைவபா ரதிமுத்து சாமிவேள் செய்துபுக ழெய்தி னனரோ. [வாய்ச்

---

வாலாஜாப்பேட்டை, சர்வகலாசாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
கோ. ம-௱-௱-ஸ்ரீ இராமானுஜ நாயகரவர்கள் மாணுக்கர்

**கோ. வடிவேலு செட்டியாரவர்களியற்றிய**

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தண்டலை யுடுத்ததிரு வையா றதனிற் றங்கியவிச் சுவகுலத் தோன்
அண்டகோ டிகளை யளித்தவ னபிதானத் தையுளோன் புரித வத்தால்
மண்டலப் புலவர் விண்டலப் புலவர் மகிழ்ந்துவெண் டாமரை வீடாக்
கொண்டவளே யென்றேத் திடவுலகங் குதுகலித் திட வவதரித் தோன் (க)

முத்தரே போற்று முத்தையே துதிப்போன் முத்துசா மிப்பெயர் பெற்றோன்
வித்தக மாய சதுர்த்தச கலையின் விழுமிய பொருளெலாந் திரட்டி
யித்தரை யுள்ளோ ரறமுத னன்கு மெய்திடத் தன்புக ழோங்கப்
பத்திசேர் விசுவப் பிரமபு ராணம் பைந்தமிழாற் புகன்ற னனனே. (உ)

கவர்ன்மெண்ட்டாபீஸ் கிளர்க், சிந்தாத்திரிப்பேட்டை
ம-ா-ா-ஸ்ரீ கா. லோகநாத முதலியாரவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமதி யரவங் கொன்றையு முலகோர் தெரிந்துயவணிந்தறம் வளர்த்தா
ளொருபுறத் திலங்கத் திருவையாற் றமருமுத் தமர்திரு வருள் பெற்றுப்
பெருமைசேர் விசுவப் பிரமபு ராணம் பிறங்குசெந் தமிழினாற் புகன்றான்
மருமலி முத்துச் சாமிபா ரதியென்மாண் புடை மதிவலோன் றானே.

---

சென்னை, பச்சையப்ப முதலியார் காலெஜ் தமிழ்ப் பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ பூ. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் மாணாக்கர்
ஆரணி, மே. சென்னகேசவுலு நாயுடு அவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரந்தர னுலகிற் பொருந்திய சுதையோர் பொறிக்கு மாத்திரஞ் சுவையளிக்கும்
நிரந்தர மன்று ளடியர்வாழ் வெய்த நிருத்தனம் புரிகழல் போற்றி
வரம்பெறு முத்துச் சாமிபா ரதிதன் வாக்கெனுங் கடறனில் வந்த
திரம்பெறு விசுவப் பிரமபு ராணத் தெள்ளமுதத் துறுசுவை தான் (௧)

வென்றிகொள் மெய்வாய் கண்ணொடு மூக்குச் செவியென விளம்பு மைம்பொறிக்கும்
துன்றிய சிறப்போ டின்பதை யளித்துத் துயர்புரி பிறவியாங் கடலைக்
குன்றிடச் செய்து முத்தியங் கரையைக் குறுகுவா னடத்திடு மென்னின்
மன்றதன் பெருமை யெம்மனோர் தம்மான் மகிழுற வழுத்தவு மெளிதோ. (௨)

---

ஒழுகரை, சடகோப கவிராயரவர்கள் குமாரரும்,
புரசை அஷ்டாவதானம் ம-ா-ா-ஸ்ரீ சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கருமாகிய
பு. சிவகுருநாத ஆசாரியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாரதிற்குப் புகழும் வருணாச்சிரம தருமங்கள் பலவும் வாய்ந்து
பாரதிற் சீர்பெறு விசுவப்பிரம புராணங் கேட்டுப் பதுமன்பாரி
பாரதியானல திருவை யாற்றுமுத்துச் சாமியெனும் பண்பன் றானே
பாரதியென் றன்புடனே யுரைத்துவந்தா ளெனிலவன்சீர் பகரற் பாற்றே.

---

வீபூர், ம-ா-ா-ஸ்ரீ காளப்பத்துடு அவர்கள் குமாரர்
நாதமுனி பத்துடு அவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐந்தொழின் முதலைந் தானனத் துதித்தின் பாருமைப் பிரமர்கண் மரபோர்
ஐந்துலோ கத்தா லைந்திணை செழிக்க வைந்துகிர்த் தியமியற் றுதல்போல்
ஐந்தியற் றமிழால் விச்சுவ புராண மறைந்தன னைம்பொறி வாயில்
ஐந்தவித் தவர்வாழ் வுறுதிரு வையாற் றவிர்முத்துச் சாமிபா ரதியே.

## செங்கற்பட்டு ஜில்லா வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

தசாவதானம்

ம-ா-ா-ஸ்ரீ பேறை. சேகநாதப் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னிலமைந் தருநிதியான் மணியுமுறு நகர்ச்சுரர்கள் புவிவந் தேற்ப
உன்னியவி யளித்திடுபூ சுரர்மறையா கமமிருதி யுயர்பு ராணம்
நன்னியமத் தொடுபயில்வோர் பொருளுரைப்போர் முழக்கமறா நலமெஞ் ஞான்றுந்
துன்னியவை யாற்றினில்விச் சுவப்பிரம குலமணியாத் தோன்றி னாளும் (க

நற்குணமா தியிற்சிறந்து பற்பலநூ லுணர்ந்துசிவ ஞான மெய்தி
அற்பினொடு நித்தியனை மித்திககன் மங்கடிறம் பாம லாற்றிப்
பொற்புறவாழ் தருமுத்துச் சாமிபா ரதியென்னும் புலவர் கோமான்
பற்பலதன் மங்களையும் வடமொழியின் படிதமிழிற் பலருந் தேர்வான் (உ)

சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமு நடைநயமுந் தொகுக்கில் யாரே
நன்னயமுந் தெருணயமு நவநயத்தாந் தவநயமு நவில கில்லார்
பொன்னயமொன் றென்பவரும் பன்னயந்தேர் புலவர்களும் புகழ்ந்து வாழ்த்தச்
சொன்னயதி யுடைவிசுவப் பிரமபுரா ணந்தன்னைச் சூழுங் காலே (ந)

---

திரிசிரபுரம், மஹாவித்வான்

ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் மாணாக்கரும்,

காஞ்சீபுரம், பச்சையப்ப முதலியார் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய

தீ. சு. வேலுசாமிப் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குருவையாற் றினன்றுனிவிச் சுவப்பிரம புராணநூல் குலவப் பாவாம்
உருவையாற் றினனெவரு மூவப்பவற நூலுணர்ந்தோ னுன்னு வார்க்குக்
கருவையாற் றினந்துதிக்கும் வாகீசர்க் குயர்கயிலைக் காட்சி நல்கும்
திருவையாற் றினன்முத்துச் சாமிபா ரதிவிதியிற் றிறன்மிக் கோனே (க)

பாரதியார் புகழுமுடி வெனப்பர்வத் தன்புகழ்தான் பனியைக் காலும்
பாரதியார் வத்தனெனப் பரப்புமுத்துச் சாமியெனும் பண்பின் மிக்க
பாரதியா ரருள்விச்சு வப்பிரம புராணநூல் பயனுற் றோங்கப்
பாரதியா ரருள்பெற்றுப் பாடினனென் றுலவன்சீர் பகரற் பாற்றோ. (உ)

காவாந்தண்டலம், உபயகவிப்பிரசங்க வித்வான்
ம-া-ா-ஸ்ரீ நடேசுவராசாரியாரவர்கள் சகோதரர்
அம்பிகேசுவ ராசாரியாரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஞ்சசா தாக்கியஞ்சேர் பரம்பொருளின் பஞ்சமுகத் துதித்துப் பாரிற்
ஞ்சகிருத் தியம்புரியு முயர்பஞ்சப் பிரமகுலப் பண்பு சொற்றூன்
பஞ்சதரு நிலத்தரவி யேற்கவரும் பஞ்சநத க்ஷேத்ரம் வாழும்
பஞ்சவிய லுணர்ந்தமுத்துச் சாமிபா ரதியென்னும் பாவல் லோனே.

---

திருவோத்தூர்த் தவசியிலிருக்கும்
பாரதப் பிரசங்கியும், ஆயுள்வேதபாஸ்கர பண்டிதருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ அரங்கசாமிப் பிள்ளை யவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேன்வ ழிந்தொழுகு சோலை வானுலகு செறியு மாடுபொழி லென்னவார்
திருவை யாற்றிலுறை விச்சு வப்பிரம தெய்வவிகக் குலமுந் நீரிலேர்
தான்வ ழிந்தொழுகு சந்தி ரன்சகல சாத்தி ரங்களுணர் பாற்கரன்
சாது பூஜிதச பாப்ப்ர சங்கன்மிகு சாம்ப்ர தாயனறி வாகரன்
கான்வ ழிந்தொழுகு கமல மார்பன்முத்து சாமி பாரதிக வீச்சுரன்
கருது பூவுலகி லிணையி லாதகவி ராஜ ராஜர்களி கூரவே
வான்வ ழிந்தொழுகு மமிர்த முங்கறைவ டித்த நான்மறையு மென்னநீள்
வைய கம்புகல விச்சு வப்பிரம மாபு ராணமுரைத் தானரோ.

---

வேலூர், அமெரிக்கன் மிஷியன் கரலிஸ்கூல் தமிழ்ப்புலவரும்
கோலபுத்தகாசிரியருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ப. திருவேங்கடம் பிள்ளையவர்களியற்றிய
நேரிசை யாசிரியப்பா.

கண்ணகன் ஞாலத் துண்ணி லாவுஞ்செங் கரும்புங் கதலியுங் கமுகு மாவும்
பலவுந் தெங்கும் பலவுங் கஞலும் திருவை!யாறுடை யான்மருவுநன் னடையான்
இலக்கிய விலக்கண மெவர்க்குந் தருவோன் நொடியிற் பல பாநுவலும் வலவன்
அப்பாவா சாரிய னருள் புதல்வன் செழுமம் புயத்தார் திகழும் புயத்தான்
மூவுலகு யவருண் முகில்வா கனத்தான் இலங்கா.நகர மெரிபட வாட்டி
இராமனுக் குப்புகழ் நல்கிய வனுமத் துவசன் பரசிவன் றுணையடி மலருங்
கருணையுஞ் சாந்தமுங் கல்வியு ஞானமுந் தங்கு முளத்தான் தனதனேர் தனத்தான்
கனம்போற் பொழிசெங்¦கரத்தான் முத்துச் சாமிபா ரதியெனச் சாற்றுங் கவிஞன்
விச்சுவப் பிரம வியன்குல மோங்க வடமொழி நூலை வாக்கான் வடித்துத்
திடமிகு தென்மொழிச் செய்யு ளாக சொற்பொரு ணயங்க லெங்கப் புலவர்
மெச்ச வுரைத் தான் மேலாம் விச்சுவப் பிரம புராணமென் னூலே.

## சேலம் ஜில்லா வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

தஞ்சைமாநகரம் காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும்
ம-ா-ா-ஸ்ரீ ஐயாச்சாமிப் பிள்ளையவர்கள் மாணுக்கருளொருவரும்
சேலம் லண்டன் மிஷியன் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதருமாகிய
**ப. மாரிமுத்து நாயகரவர்களியற்றிய**
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அலைகடலின் மந்தரத்தை நிறுவி மத்தித் தமுதமெடுத் தமரர்க்கன் றளித்த வாபோல்
நிலைபெறுமா ரியக்கடலிற் றூலை நாட்டி நேடியைந் தொன்பதத்தி யாயந் தன்னைக்
கலைஞர்பலர் கூட்டுணத்தென் மொழியாற் செய்து காணவிஸ்வப் பிரமபுரா ணப்பே
தலைமைபெறு மையாற்றின் மேய முத்துச்சாமிபாரதிமகிபன் றந்தான்மாதோ [ர்தந்து

---

சேலம் லண்டன் மிஷியன் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ ப. மாரிமுத்து நாயகரவர்கள் குமாரர்
**அரங்கசாமி நாயகரவர்களியற்றிய**
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உய்யு நெறிக்கிங் கொருநூலே போது மெனத்தன் னுளத்துன்னிச்
செய்யு முறையி னைந்தொன்பா னத்தி யாயஞ் செய்தமைத்தான்
மெய்யுந் தெருளுஞ் சிவபத்தி மேன்மை யொழுக்கு முடையனென
வையம் புகழ்முத் துச்சாமி பார திப்பேர் வனைந்தோனே.

---

## கோயமுத்தூர் ஜில்லா வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

கும்பகோணம் காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
திரிசிரபுரம், ம-ா-ா-ஸ்ரீ சி. தியாகராசச் செட்டியாரவர்கள் மாணுக்கரும்
கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய
**கும்பகோணம், ஆர். சபாபதிப் பிள்ளையவர்களியற்றிய**
நேரிசை யாசிரியப்பா.

பூமலி யிதழிப் பொலஞ்சடா டவியின் மாமதி வான்புனல் வைத்தரு ணிமலன்
எண்ணியோ ருள்ளத் தெண்ணியாங் குருக்கொடு நண்ணிமற் றவர்வினை நலிந்திடு
நாயகன், விதிமுதல் வானோர் வீயா வகைமகோ ததிவரு கொடுங்கடுத் தாங்கெழிற்
களத்தோன், இயலான் மாக்க ளின்புற விமய மயிலொடுங் கூடி மகிழ்ந்திடு புண்ணி
யன், சிருட்டிமுன் னைந்து செய்லினி தோங்க வருட்டிரு வம்பலத் தாடுபூந் தாளோன்
உலகெலாந் தழைக்க வுரைத்த நான் மறையின் இலகிய பொருளமை யியற்புரா ணங்
களுள், இச்சகத் தியாரு மெச்சுசீர் புனைந்த விச்சுவப் பிரம வுச்சிதப் புராணம்

அலகில்சீர் வடமொழி யதனினின் றுலகத் திலகுறத் தென்மொழி யீதுவே றிலவென, மன்னுறு பெயர்முதன் மருவிய நான்மைச் சொன்னயம் பொருணயந் தோன்ற வெவற்குந் தடவரை யேந்துபூந் தாமரைக் கண்ணன் கடல்கடைந் தமுதங் கடவுளர்க் கீந்தென, வெழுத்து முதலைந் திலக்கண முணர்ந்தோர் விழுத்தகு மிலக்கிய மிஃதென மிழற்றப், பைந்தமிழ் பழுத்துறை பள்ளி யாகச் செந்தமிழ்க் கவியிற் றிரட்டித் தந்தனன், இத்தகு பெரும்பய னெய்திய புலமை மெத்திய சீர்த்தியின் விளங்கியோ னியாரெனின், மறைதரு வாயா விறைதரு மிலக்கணங் குறைவறக் கொண்ட குறுமா முனிக்கு, மதிதவ ழிமய மடப்பிடி யருளின் நிதியெனக் கொடுத்த நீடுமாப் பொன்னி, மாநதி சுரத்தலின் மாநிதி மல்கு வளவர்சீர் நாட்டின் மறைச்சிறூர்த் தொகுதி, புளமகிழ் வெய்தி யளவிலாக் கலைகள் ஓதுவ கேட்டவற் றுளபொரு ளுணர்வான், ஆதபச் செந்தழ லகங்கலை யணங்கு வீற்றிருந் தருந்தவ மாற்றுதல் கடுப்பத் தடந்திகழ் தாட்செந் தாமரை நடுவண் மடந்திகழ் செவ்வாய் வாலனந் துயிலும் நலம்பொலி காட்சி நண்ணி விளங்குந் தலம்பொலி பதிகளுட் டகுபதி யாய நந்தியெம் பெருமா னவையின்மா தவஞ்செய் தந்திவான் மேனிய னருள்வரம் பெற்ற மையாற் றெழிந்த மெய்யார்க் கிடமா மையாற் றென்று மகமகிழ்ந் துறைவோன் மாசிலா வப்பா வாசாரி மால்செய் யேசிலாத் தவப்பய னெனச்சொல வுதித்தோன் கலைக்கட னீந்தியக் கரைகண் டுள்ளான் புலைத்தொழி லோரையோர் பொருளெனக் கொள்ளான், கற்றோ ரவையி னுற்றிடு கவிஞன் முற்றில்விச் சுவகுல முடிமணி யானோன், பன்னக வேந்துடல் பனிக்குநல் லறிவன் என்னகத் தென்று மியைந்திடு நண்பனந், தாரணி முத்துச் சாமி, பாரதி யெனப்புவி பன்னுநா வலனே.

---

குனியமுத்தூர் கிராமம்
கருணீகராகிய ம-ா-ா-ஸ்ரீ கருப்பண்ண பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுருஞ் சடைப்பரமன் சேய்க்குரைத்த விச்சுவபு ராண மவ்வா
றென்னரும் பணிந்தேத்துஞ் சுவிரதனுக் குயர்முனிவ னோது மீது
மன்றுரும் வடமொழியி லிருந்ததனைத் தென்மொழியா மாநி லத்திற்
றென்னரு மையாற்று முத்துச்சா மிக்கவிஞன் செப்பி னானே.

---

சோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
ம-ா-ா-ஸ்ரீ ஆர். சபாபதி பிள்ளையவர்கள் மாணக்கர்
வே. சீநிவாசையங்காரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நடங்கொண்ட பரன்குகற்கு நவின்றருள்விச் சுவப்பிரம நற்பு ராணம்
இடங்கொண்ட பூதலத்தியா வருமுணரத் தமிழ்மொழியி னினிது சொற்றான்
வடங்கொண்ட முலையார்த முகத்தெழில்கொண் டேகுறுவான் மதியந் தங்குந்
தடங்கொண்ட பொழில்சுலவை யாற்றுமுத்துச் சாமிபா ரதிதக் கோனே.

பாலக்காடு, மேலமுறிவிநாயகர் ஆலயத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை
உபாத்தியாயரும், ம-ா-ா-ஸ்ரீ பொன்னப்ப பிள்ளையவர்கள் குமாரருமாகிய
நல்லதம்பிப் பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கஞ்சனதன் காண்பரிய கங்கைமுடிக் கண்ணுதலெங் கடவுள் வாழும்
பஞ்சனதந் தன்னிடைவாழ் மதமூன்றி னிரண்டுகரம் படைத்த லோடு
மிஞ்சனதஞ் சாமியெனும் பாரதியார் விசுவவயன் விமலக் காதை
யஞ்சனத மெனப்புலவர் வியந்திடவே தமிழ்ப்பாவா லறைந்திட் டானல்

---

## திரிசிரபுரம் வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

வரகநேரி ம-ா-ா-ஸ்ரீ சவரிமுத்துப் பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்மேவுங் கவிஞர்களான் மொழிபெயர்க்கப் படாத்திறனைச் சிறக்கக் கொண்டு
பார்மேவும் விஸ்வப்ரம புராணமதைத் தென்மொழியாற் பாடித் தந்தான்
நீர்மேவு மையாற்று முத்துச்சா மிப்புலவ னிலத்தி லென்றும்
நார்மேவு மறிஞரெலா மகங்களிக்க விவன்பெருமை நவில்வார் யாரே.

---

திரிசிரபுரம், வித்வான்
வரகநேரி ம-ா-ா-ஸ்ரீ சவரிமுத்துப் பிள்ளையவர்கள் மாணுக்கருளொருவராகிய
வரகநேரி, து. சோமசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய
பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெய்யாங் கருணைப் பிரமவியல் விளங்கா ராகிச் சிலநூலை
வீணே புரட்டிப் புரட்டிமனம் வெறுத்துத் தவித்து வேலையுடைப்
பொய்யா முலகி லுழன்மாக்கள் பொருந்து மோக்க வாறிதெனப்
பூரித் தெழுந்து கூட்டுணநற் புலவர் மதிக்க வடமொழிசே
ரையார் விசுவப் பிரமபுரா ணமதைப் பகர்ந்தான் றென்மொழியி
லளிதண் ணெர்வாய் முரலமயி லகவும் பொழில்கள் பலசெறிந்த
வையா றெனுமம் பதியுடையா னரவா பரண னிருகழல்வா
ழகத்தான் முத்துச் சாமியெனு மருமைப் புலமை யமைந்தோனே.

---

## தஞ்சைமாநகரம் வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

தஞ்சைமாநகரம்

ம-ள-ள-ஸ்ரீ ச. மதுரைமுத்து உபாத்தியாயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமகணு யகனுபி யங்கமலத் திசைமுகவண் டிசைநால் வேத
அருமலரின் மணமாக வவிரும்விசு வப்பிரம மான்மி யத்தைத்
தருமருவை யாற்றமுத்துச் சாமிபா ரதிப்பமரஞ் சால்பி னுய்வுற்
றொருமறுவி றமிழ்மொழியா லுலகமெலா முணரவணிந் துரைத்த தாமால் (க)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகுபுகழ் தருவிசுவா தீதபரப் பிரமத் துயர்மகத்து வந்தீப நிகர்மறைவா யுள்ள திலகவெழிற் றமிழ்ப்பாவாற் றூண்டுதரு கோலா யாவர்களும் வியப்புறுமா றினிதி யற்று வித்தான், அலகில்வள நிறைசென்னி நாட்டில்வள ரையாற் றறம்வளர்த்த நா யகிதன் னருட்பிரபா வத்தாற், பலகலையு முணர்ந்துபுகழ் படைத்தமுத்துச் சாமிபா ரதியென் றேயுரிமைப் பேர்புனைபா வலனே. (உ)

---

திரிசிரபுரம் மஹாவித்வான்
ம-ள-ள-ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணக்கருளொருவரும்
தஞ்சைமாநகரம் எஸ். பீ. ஜீ. காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்துபவரு
மாகிய மூ. ஐயாச்சாமிப் பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வரைபடுமா வகில்சுகந்த மான்மதநா விக்குலமு மலிய வீசித்
திரைபடுமோ மரகதம்வெண் டரளமணிப் பிரவாளந் திகழச் சேர்ந்து
கரைபடுபொன் னனிமிகுமை யாற்றினூறு மறிஞர்மனங் களிக்கச் சீர்த்தி
யுரைபடும்பா ரதிமுத்துச் சாமிநா வலவனென வுரைக்கு மேலோன் (க)

நற்றவத்தோ ருரைநெறியிற் றவராத சீலமதி னூரு நிற்போன்
சுற்றமதா யரனடிக்கே தொழும்புறுவோர் தூயமனத் தொடர்பு பூண்டோன்
பற்றலுறு பசுபாசப் பதிமுதலா மிலக்கணங்கள் பகுத்து ணர்ந்தோன்
கற்றுணர்ந்தோர் மகிழ்விசுவப் பிரமபுரா ணந்தமிழிற் காட்டினனே. (உ)

---

தஞ்சைமாநகரம் வடக்குவாசல், எஸ். பீ. ஜீ. ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
ம-ள-ள-ஸ்ரீ இராமைய வஸ்தாது அவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வடமொழிவிச் சுவப்பிரம புராணமதைத் தெளிவோ டாய்ந்து
கார்கொண்ட கடல்சூழு முலகினுயி ரறிந்துய்யக் கருத்தி லுன்னிப்
பார்கொண்ட வையாற்றில் வைகியமுத் துச்சாமிப் பார திப்பேர் [னே
நேர்கொண்ட கவிஞன்றென் மொழியின்மொழி பெயர்த்திசையை நேர்ந்தான் மன்

தஞ்சைமாநகரம் காலேஜில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும்
ம-ா-ா-ஸ்ரீ ஐயாச்சாமிப் பிள்ளையவர்கள் மாணாக்கருளொருவரும்
தஞ்சை மிஷியன் காலேஜில் இரண்டாவது முனிஷியுமாகிய
சுப்பராயப் பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பன்மேவு மகத்தியங்தொல் காப்பியமுந் நூனன்னூல் பரவ மற்றவ்
வலன்மேவு முதன்ஞான நூல்களெலா மெஞ்ஞான்றும் வழங்க லேபோற்
றலன்மேவச் செயன்முத்துச் சாமியெனும் பாரதிமாற் றமிழி னீதிப்
புலன்மேவு கின்றவிசு வப்பிரம புராணமிதைப் புகன்முன் மாதோ.

---

தஞ்சைமாநகரம், கருந்திட்டைக்குடி
அஷ்டாவதானம், ம-ா-ா-ஸ்ரீ இராமலிங்க பிள்ளையவர்களியற்றிய
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தருமலிபொன் னகர்க்கிறைமற் றெவரு மேத்துந் தனிவிசுவப் புராணமதைத் தமிழி
ற் றந்தான், மருமலிந்த மலர்ப்பிழியுண் டரிவண் டேங்கும் வனஞ்செறிந்த வளஞ்
சேரை யாற்றின் வாழ்வோன், அருமலிந்த விலக்கணந்தொன் னூல்க டேர்ந்த வவை
மலிந்த புலவர்மெச்சு மன்பு பூண்ட, திருமலிந்த சுகுணன்முத்துச் சாமி வள்ளல்
செந்தமிழ்ப்பா ரதியான சீர்த்தியோனே.

---

தஞ்சைமாநகரம், கருந்திட்டைக்குடி
ம-ா-ா-ஸ்ரீ ம. கண்ணுசாமி செட்டியாரவர்களியற்றிய
கலிவிருத்தம்.

பேர்கொள் விஸ்வப் பிரமபு ராணத்தைப்
பார்கொ ளத்தமிழ்ப் பாவமு தாக்கினன்
தார்கொள் சீர்முத்துச் சாமியென் பாரதி
ஏர்கொ ளையாற் றிருந்திசை யோங்கவே.

---

திரிசிரபுரம், மஹாவித்வான்
ம-ா-ா-ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் மாணாக்கருளொருவராகிய
வல்லமாநகர், கந்தசாமி உபாத்தியாயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமணக்கு மான்மதிக்கும் விச்சுவபு ராணமதை வயங்கு பாரிற்
றேமணக்குந் தென்மொழியா னவிறியென வான்றோர்கள் செப்பக் கேட்டுத்
தூமணக்குஞ் சொற்சுவையும் பொருட்சுவையு மாங்காங்குத் தோன்றச் செய்தான்
நாமணக்கு மியன்முத்துச் சாமிபா ரதியென்னு நலமிக் கோனே.

## நாகபட்டணம் வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

நாகபட்டணம் ஐ ஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும், நாகை நீலலோசனிப்

பத்திராதிபருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ பூண்டி, சதாசிவம் பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பார்வளர்க்கும் பொன்னிநதி பலகாலி னெக்காலும் பரந்து பாயக்
கார்வளர்க்கும் பொழில்ககனக் கடவுளர்க்குப் பலசுவையின் கனியை யீந்து
பேர்வளர்க்கு மையாற்றுப் பெருந்தலமே தந்தலமாப் பிறங்கச் செய்த
சீர்வளர்க்குந் தவமுடையான் விஸ்வகுல நலந்திரண்ட சிறப்பின் மிக்கான் (க)

பாவினிசை யப்பாவாம் பாற்கடலின் றெழுந்துமிகப் பாரித் தோங்கும்
நாவினிசை நன்முத்துச் சாமியெனு நாவலர்கோ னயந்து நாடிப்
பூவினிசை மிகுத்தோங்க நயம்பொலிவிச் சுவப்பிரம புராணந் தன்னைத்
தேவினிசை வடமொழிநின் றெடுத்துமது ரத்தமிழாற் றிகழச் செய்தான் (உ)

பொருண்மணத்தைப் புகழ்வேமோ பொருண்மணந்த சொன்மணத்தைப் புகலு வே
அருண்மணக்கும் அறமுதலா மரும்பொருளி னுட்சிதனை யறைகு வேமோ [மோ
கருமணக்கு மூலகமெலாங் கதிமணக்கச் செய்கருத்தைக் காட்டு வேமோ
தெருண்மணக்கு மிந்நூலி லெதன்சிறப்பை யென்னவெனத் தெரிப்பே மம்மா. (ஙு)

---

வித்வான் ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசாமி உபாத்தியாயரவர்கள் குமாரர்

குமாரகுரு உபாத்தியாயரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பற்பலவா கமம்பரவு மையா றென்னும் பழம்பதி யிலுறைசுகுணன் பஞ்ச ப்ரம்ம
விற்பனகோத் திரத்தலைவன் சலதி யுண்ட மேலவனை நிகர்விரகன் விதியி னுய்ந்து
கற்பனையோ டலங்கார மிலங்க நான்கு கவிமாரி பொழியுமுகில் கலைமா தோங்கு
பொற்பமர்முத் துச்சாமி யெனப்பேர் வாய்ந்த புலவன்வான்புலவரெலாம்புகலநாளும்

மருமலிநன் வடமொழியி லிருந்த விஸ்வ மான்மியத்தைத் தென்மொழியின் மண்ணு
ளோர்க்குச், சுருதியுத்தி யனுபவமுந் தோன்ற நல்ல தொடையடியுங் கற்பனையுஞ்
சுதையை யொப்ப, அரிதரிதீ தென்றறிஞர் செவிம டுத்துண் டானந்த பரவசமுற்
றகங்க ளிக்கப், புரைதவிர்விச் சுவப்பிரம புராணந் தன்னைப் புகன்றுலகி லழியாத
புகழ்பெற் றானே. (உ)

---

## கும்பகோணம் வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

திருஎவ்வுளூர் ம-ா-ா-ஸ்ரீ இராமசாமி செட்டியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நலம்புரியும் பொற்சோதி நாதருறை யையாற்று நகர்க்கண் விஸ்வ
குலம்புரியு மெய்த்தவத்தால் வலம்புரிச்சங் கினிலுதித்த குணமுத் தேபோற்
பொலம்புரியும் பொன்சேர்கை யப்பாவு மாற்கினிய புத்ர ணுகப்
பலம்புரியும் படியுதித்த முத்துசா மிப்பெயர்கொள் பண்பன் மாதோ (க)

அன்னவனே யெவருமுத்து சாமிபா ரதியேயென் றறைதல் வித்தை
தன்னின்மிக்கோ னெனக்காட்டுஞ் செய்தவிஸ்வ புராணமதைத் தகவாய்க் காணிற்
சொன்னயமும் பொருணயமுஞ் சதுர்காட்டு முளத்துவகை தோன்ற வோங்கிப்
பன்னகவேந் தாயிரமாஞ் சிரந்துளக்கிக் காட்டுமியற் பாவ லோரே. (உ)

கும்பகோணம் கெவரன்மெண்டு சித்திர வித்தியாசாலைச்
சிற்பவித்தியாபோதகாசிரியராகிய
ம-ா-ா-ஸ்ரீ தி. மு. முக்கண்ணுசாரியவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாந் தழைப்ப வைந்தொழில் புரியு முயர்தனி விச்சுவப் பிரம
குலமுலாம் புராணம் வடசொலான் முனிவன் கூறிரு காண்டத்துண் முதலை
நலமெலாம் விரித்துச் செந்தமிழ்ப் பாவா லுற்பதிற் றைந்தத்தி யாயத்
தலகிலாப் பொருள்கொள் சொற்சுவை பொலிய வறைந்தன னியாவருங் களிக்க (க)

இன்னணம் புகன்று புண்ணியம் புகழு மெய்தினே னியாவனு மென்னிற்
பன்னலஞ் செறிந்த வைந்நதித் தேவப் பனவகு லோத்தம னியார்க்கும்
நன்னலம் புரியப் பாவுவே ளியற்று நற்றவப் பயனென வந்தோன்
உன்னுநாற் கவியைந் திலக்கணப் புலமை யொளிர்முத்துச் சாமிபா ரதியே. (உ)

## மாயூரம் வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

சிங்கவனம், வித்வான் ம-ா-ா-ஸ்ரீ சுப்புபாரதியாரவர்கள் மாணுக்கருளொருவராகிய
மாயூரம், வித்வான் சு. கிருஷ்ணையரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூதலமன் னுயிர்க்குறுதி தரத்தக்கவிச் சுவப்பிரம புராணந் தன்னைப்
போதருநாற் பொருள்பயப்ப நன்குணர்ந்து தண்டமிழாற் புனைதல் செய்தான்
தாதவிழ்பூங் கொன்றைமுடிச் சிவபெருமான் றூண்டகவேந் தனுக்கோ ரன்பால்
மேதகுநங் கயிலையிது காண்கவெனக் காட்டியருள் வியப்பொன் றேயோ (க)

தன்னீரிற் படிந்தெழுகால் வீசுதல வாசிகளுந் தனிவான் முத்திச்
சென்னீர்மைக் குரியரெனும் புகழ்ப்பொன்னி நதியுமுலாந் திருவை யாற்றில்
முன்னீர்வைப் பொதியவிச்சு வப்பிரம குலத்துதித்து முழங்கு சீர்த்தி
மன்னீர்மைக் கனதனவா னப்பாவா சாரிதவ வளத்தான் மன்னோ (௨)

தோன்றுபுமன் னுயிரனைத்துந் தன்னுயிர்போற் கருதியமெய்ச் சுகுண வான்கை
மான்றழுவு மழுவுடையான் மலரடிக்கன் பகலாத மாண்பு பெற்றோன்
ஊன்றுபல விலக்கியமு மிலக்கணமுந் திரிபறக்கற் றுணர்ந்து வாய்மை
ஆன்றபுக ழமைதருமுத் துச்சாமி பாரதிப்பே ரணிந்து ளானே. (௩)

---

மாயூரம், விசுவப்ர்ம்ம வம்ச வைதீகாசாரியராகிய
ம-ா-ா-ஸ்ரீ சிவலிங்க உபாத்தியாயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கற்றவர்கள் புகழ்விச்சு வப்பிரம வமிசத்தார் கனிவாற் செய்த
நற்றவமோ ருருவெடுத்த தெனத்திருவை யாற்றினிடை நண்ணி மேன்மை
பெற்றமுத்துச் சாமிபா ரதிமகிழ்ந்து வடநூலைப் பிறழா தோர்ந்து
முற்றுஞ்செந் தமிழால்விச் சுவப்பிரம புராணமதை மொழிந்திட் டானால்

---

மாயூரம், அஷ்டாவதானம்
ம-ா-ா-ஸ்ரீ சந்திரசேகர உபாத்தியாயரவர்களியற்றிய
அறுசீர்க்கழிநெடில்டியாசிரியவிருத்தம்.

பூமேவு பாரதியிப் பூமேவி யைந்தெழுத்துப் பொருந்து மாண்பாற்
பாமேவு மைந்துநதிப் பதியின்முத்துச் சாமிப்பேர் படைத்துப் போற்றும்
மாமேவு புகழ்விசுவப் பிரமவுரு வத்தைந்து வதனம் பெற்ற
தூமேவு மைந்துவகைப் பிராமணர்சீர் புகன்றனனேற் சொல்வ தென்னே (௧)

பிராமணச்சீ ராம்விசுவப் பிரமபுரா ணத்தையச்சிற் பெருகச் செய்தார்
தராதலத்து விசுவமர பினர்சதா சிவமார்க்க சகாய ஞான
இராமலிங்கப் பேர்க்குடந்தை வைதிகோத் தமன்றவமீ தென்பா மிந்தப்
புராணபலம் புராதனம்போ லுயிர்களெலாம் புருடார்த்தம் பொருந்து மன்றே. (௨)

---

மஞ்சகுப்பம் ஜில்லா, திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழ்ப் போதகாசிரியர்
ம-ா-ா-ஸ்ரீ க. ரா. சிவசிதம்பர முதலியாரவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

விச்சுவப்ர்ம புராணம் வியன் றமிழால்
மெச்ச வறிஞர் விழைந்தளித்தான்—விச்சுவநற்
பூங்குலத்தோன் வல்லோர் புகழ்முத்துச் சாமியென
ஓங்குதமிழ்ப் பாரதியென் போன்

## புதுவை வித்வான்களியற்றிய சிறப்புப்பாயிரங்கள்.

புதுவை கவர்ன்மெண்டு பிரதம பாடசாலைத் தமிழ்த் தலைமை புலமை நடாத்தும் ம-ா-ா-ஸ்ரீ சாமி பொன்னு உபாத்தியாயரவர்களியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாம் புகழுந் திருவையா றதனி லுற்றவ னுத்தம விசுவ
குலமெனும் பாற்சா கரத்தினிற் கலையார் குளிர்மதி போலவ தரித்தோன்
சலதர னடியார்க் கன்புளோன் முத்துச் சாமிபா ரதியெனுந் தக்கோ
னிலகிடும் விசுவப் பிரமமான் மியமொன் றியம்பினன் றமிழினி லினிதே.

---

புதுவை, ம-ா-ா-ஸ்ரீ அ. பெரியசாமிப் பிள்ளையவர்களியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

உலகெலாம் பன்முறை யுவந்தளித் தருளிய வலகிலாக் கருணை யம்பிகை தந்த
ஞான வமுதாம் போனக மருந்திய காழிவள்ளலு மாழியைக் கல்லாம்
புணையிற் கடந்த வினையில்வா கீசரும் முதலைவா யுண்ட புதல்வனை யீந்திடச்
செந்தமிழ் புகன்ற சுந்தர மூர்த்தியும் அரியயன் காணு வடிமுடி யீசனைப்
பரிமா மிசைவரப் பண்ணிய ஞானியும் அமிழ்தினு மினிக்குந் தமிழ்மறையினிற் றுதி
செய்யா மகிழ்ந்த வையா றுடையவன் கரும்பொன் குரு கல்வடு செம்பொன்
அரும்புஞ் சிருட்டிக ளைந்தையுங் கொண்ட மனுமய துவட்ட சிற்பிவிஸ் வகனுரென்
றோதுபிர்ம் மாக்களின் கோதிலாக் குலத்தினன் பூமிசை விளங்கலாற் பாமகள் கண
வனும், கரவணை யொழித்தலா லரவணைச் செல்வனும் மதிமே லுறுதலா னதியணி
பரமனும், மாவத் திரத்தாற் பூவாண் மன்னொடு மூவருந் துதிசெயு மூடிகக் கடவுளும்
கற்பக மண்டலாற் ககனத் தவனொடு பற்பலர் புகழும் பன்னிரு கரத்தனும்
செம்மையைப் பற்றலா லம்மற வாகுவும் தென்றலஞ் சாரலாற் பன்றமிழ் முனிவனும்
போதம் புணர்தலால் வாதவா கனனும் பலகலை மேவலா விலகுவான் மதியமும்
அருணன் றுதித்தலாற் கிரணமார்த் தாண்டனும் புலவர்கண் மதித்தலா னிலவுபா
லுததியும், அன்னவன் புலமையின் முன்னவ னுலகினில் தப்பாத கீர்த்தி யப்பாவா
சாரி, செய்தவ மென்னுந் திருப்பாற் கடலுண் மைதரா துதித்தவான் மருந்தும் போ
ன்றவன், கொலைமுதற் பவங்களை நிலைகெட வொழித்தவன் இரக்கங் கொடைமுதல்
யாவுநன் குற்றவன், பூதிசா தனமே பொருளெனக் கொண்டவன் சித்தமா சில்லா
முத்துச் சாமி, பாரதி யுயிர்க்குப் பயனனி யீவதாய் நால்வகைப் பொருள்களு நவ
மொழி களினுள் இணைத்துநவ ரசங்களும் யாண்டுந் துலங்க ஆதிகாண் டத்தி லறை
யுமத் தியாயம், நாற்பா னைந்தும் பாற்பட வமைத்துப் பேதியா விசுவப் பிரமபு ராணம்
பத்திய ரூபமாப் பைந்தமி ழதனின் மொழிபெயர்த் தருளினன் மூதறி வினரே
ஆதலா லவற்கிவ் வவனி செய்வதென் மனமொழி மெய்களால் வழிபட வன்றியே.

---

புதுவை, ம-ா-ா-ஸ்ரீ வி. சு. வேலாயுத உபாத்தியாயரவர்கள் மாணுக்கர்

அ. பொன்னுசாமிப் பிள்ளையவர்களியற்றிய

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்த மருமத்த னுதியர்ப் ராவும் புகழ்க்கயிலை தரிச னத்தைப்
புரிவுகொண் டுத்தாஞ் சென்றவா கீசரைப் புராரியோர் முனிவ னாகித்
தென்பூத்த வாவியின் மூழ்கிடச் செய்துபின் றிகழ்கயிலை மருவு கோலஞ்
சேவைசெய் வித்திட்ட சீர்த்தியெங் கணுமுலவு திருவையா றுடைய சீலன்

கொன்பூத்த பஞ்சபிர் மாக்கள்குல சேகரன் கூரறிஞ னப்பா வுமால்
குமாரனுல கதனின்மே லானகவி வலரைக் குணித்திடின் முன்னிற் பவன்
மின்பூத்த வெழின்முத்து சாமிபா ரதியென்னு மேதையன் விஸ்வ பிர்ம
வியன்புரா ணப்பூர்வ காண்டமது தமிழினில் விளம்பினனு ளங்க ளித்தே.

---

புதுவை, ஸ்ரீசுவேத பதுமாசனை அக்ஷரசாலைக்கதிபர்
ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாச ஆறுமுகம் பிள்ளையவர்களியற்றிய
நேரிசை வெண்பா.

பூவின்மது கண்டுசுதை பொன்னார் கனியிரதம்
ஆவினிழு தேல மளைந்துண்ணில்——நாவலரே
என்சுவைமுத் துச்சாமி பாரதியின் விஸ்வபிர்ஹமத்
தின்காதைச் சொற்சுவைகி டில் (க)

பனிநீர்செய் யாரிளநீர் பஞ்சதா ரைமாக்
கனிவோடெட் கொண்டுருசி கண்டேன்——இனிபரசம்
ஒன்பான்சா ருங்கவிக ளுற்றவிசு வப்பிரமத்
தென்சார்பு ராணமினி தே (உ)

அரியபொருள் கல்வியென்றிவ் வம்புவியோ ரரடல்
ஒருமொழியோ வென்றன்னு வோர்காள்——பெருமையுறப்
பாரதிமுத் துச்சாமிப் பண்பன்வரை பாக்களின்மாச்
சாரமதைக் கொண்டறிவீர் தாம் (ங)

வேதப் பொருளும் வியனு கமப்பொருளும்
நீதப் பொருளு நிறைந்தொளிரும்——ஆதலினால்
நல்விசுவப் பிர்மபுரா ணம்மொவ்வொன் றெண்ணிதிபோற்
கல்வியுளா ரேகொள்வீர் கை. (ச)

---

புதுவை, ஓர்லெயான்பேட்டை, ம-ா-ா-ஸ்ரீ நாராயண நாயகரவர்கள் குமாரரும்
பு. அ. பெரியசாமிப் பிள்ளையவர்கள் மாணுக்கருமாகிய,
வேங்கடாசல நாயகரவர்களியற்றிய
பதின்ன்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாமணியி ழைத்தமே னிலைதவழ்தண் மதிதங்கள் வதனமென முத்த மிட்ட
மணவாளர் முகநாண மாதர்நகை புரிநிலவை மருவிநே மிப்பு ளுன்பா
ணேமமொடு வந்துமுலை கண்டியங் கிடுசீர்த்தி நீடுதிரு வையாற் றில்வாழ்
நிகரிலா விசுவகுல திலகனப் பரவுவள னெடுநா ளுஞற்றி டுதவந்
தாமருங் குழவியாய் வந்தசீ லன்றமிழ்ச் சாகரந் தனின்மே தையாந்
தருமத்தை நிறுவிநா வாந்தாம்பி னைக்கொண்டு தானேக டைந்தெ டுத்த
பாமருவி சுவபிரம புராணமா மமுதினைப் பார்ப்புலவர் கட்க ளித்துப்
பதுமவிழி மாலெனப் போற்றமுத் துச்சாமி பாரதிபேர் பெற்றன னரோ.

புதுவை, ம-௱-௱-ஸ்ரீ சின்னத்தம்பிப் பத்தரவர்கள் குமாரரும்
பு. அ. பெரியசாமிப் பிள்ளையவர்கள் மாணுக்கருமாகிய
பங்காருப் பத்தரவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்வளர் கற்ப முகையுடைக் தலர்ந்து பொழிதரு தேறலே நிறையுந்
தின்வளர் தடத்திற் புனல்குடை மகளிர் சுணங்குபூத் தலர்முலைக் குடைந்து
கொன்வள ரன்ஞர் கரக்கினுக் கிணையா குதுமென மரைமுகை யவிழ்ந்தே
யின்வள ரதற்கு நிகர்க்கில மெனத்தே னிருகணீ ருகுத்தலிற் சொரியும் (க)

தொங்கலங் குழலார் மதர்மழை விழிக்குத் தோற்றுநீ ரிற்பிறழ் கயல்வான்
கங்கையிற் பாயும் வரிவளை யன்னோர் களனெழி னலமதைப் பெறுவான்
பொங்கழ தனுப்பண் டவமிழைப் பதுபோற் புதுநறு மதுவுவட் டெடுக்குஞ்
செங்கம லத்தார்ந் திடுமேகர் நடையைத் திகழ்தரு மனமவண் கற்கும் (உ)

விலகிவில் லுமிழுங் கதிர்மணி குயின்ற மேனிலை வரலுறு மடவார்
அலர்தரு முகத்தைக் கண்டுள மழுங்கி யன்னலார் பின்னன்மா மதிகண்
டிலகுமிம் மதியை யுணவரு மரவென் றெண்ணியே மகிழ்வுறுந் தோகை
திலகநன் னுதலார் மயிரதை வகிர்க்கச் சிறைவிரித் தாடுமை யென்றே (௩)

இன்னபல் வளங்க ளெங்கணு நிறைவுற் றிலகிடுந் திருவையா றுறையுந்
தன்னிகர் முத்துச் சாமிபா ரதிவான் சார்பசுக் கூழ்தழைத் துய்வான்
பன்னருந் தமிழென் கடன்மடுத் தான்ஞேர் பகர்கலை கேள்வியென் வரைமேன்
மன்னிநல் விசுவப் பிரமபு ராண மழைபொழிந் துற்றது மாண்பே. (௪)

---

கொட்டாறு, தமிழ் வித்வான் ம-௱-௱-ஸ்ரீ நீலகண்ட ஆசாரியாரவர்கள் குமாரர்
கணபதி ஆசாரியாரவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முனிவர்க ளுணர்வார் காலமூன் றென்கை முத்தமிழ்க் குரவன்மாட் டுணர்ந்தேன்
இனியசெந் தமிழால் விச்சுவப் பிரம புராணத்தை யிலகுமிவ் வுலகில்
கனிவற முத்துச் சாமிபா ரதியார் கழறுமுன் கரையிலாப் பயங்கொண்
டினியதோர் விந்த மடக்குபே ருடலுங் குறுகினு னுள்ளுடைந் தன்றே.

---

திருவனந்தபுரம்
ம-௱-௱-ஸ்ரீ நாகமுத்து உபாத்தியாயரவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூரண மாக மறைநவில் விசுவப் புகழ்க்குல தருமங்கள் வயங்கும்
பேரணி வடநூ லின்படி விசுவப் பிரமபு ராணத்தைப் புவியோர்
சீரணி தமிழா லெளிதுணர்ந் துய்யச் செப்பின னளிமுரல் கமலத்
தாரணி திருவை யாற்றுவாழ் முத்துச் சாமிபா ரதியெனுங் கவியே.